15.07.2026 Mcop 228/2022 c/w Mcop 230/2022 எ.ம.சா.1 ஞானபிரகாசம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் டி.என்.76.எப்.2997 என்ற வாகனம் எனக்கு சொந்தமானதாகும். அந்த வாகனத்திற்கு விபத்து சமயம் காப்பீடு கிடையாது என்றால் நான் வாகனத்தை விபத்து சமயம் விற்று விட்டேன். வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பெயர் மாற்றம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் வாகனம் என் பெயரில் தான் சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு சான்று உள்ளது என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக எனக்கு 11.3.2025ம் தேதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் என் மகன் சதீஷ் என்பவர் அந்த தபாலை பெற்றுள்ளார். வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை எ.ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ 1 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்பதால் எ.ம.சா.ஆ 1 ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயம் என் வாகனம் சிவகாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் என் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிக்க வேண்டி எ.ம.சா.ஆ 1 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாருக்கு நான் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் என்னிடம் வாகனத்தை இருந்த பெற்ற நபரை இந்த வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

(ஒம்)K.சுதா ராணி
கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.